**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.112** **நாள்: 13.08.2019**

## இராயபுரம் மண்டலம், யானைக்கவுனி மேம்பாலத்தில் ஆணையாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., அவர்கள் ஆய்வு

பெருநகர சென்னை மாநகராட்சி இராயபுரம் மண்டலம், வார்டு–57ல் யானைக்கவுனி மேம்பாலத்தில் ஆணையாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., அவர்கள் இன்று 1(13.08.2019) ஆய்வு மேற்கொண்டார்.

இராயபுரம் மண்டலம், வார்டு–57, யானைக்கவுனி சாலையில் 50 மீ நீளமுள்ள இரயில்வே மேம்பாலம் அமைந்துள்ளது. இம்மேம்பாலம் இரயில்வே துறையினரால் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேம்பாலத்திற்கான சாய்வுதளம் பெருநகர சென்னை மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது. இப்பாலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் குறித்து இரயில்வே துறை அலுவலர்களுடன் ஆணையாளர் அவர்கள் இன்று ஆய்வு மேற்கொண்டார்.

தற்பொழுது நடைபெற்று வரும் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மின்வடங்கள் மற்றும் மின்கோபுரங்கள் மாற்றி அமைக்கும் பணிகள் முடிவுற்றவுடன் பழைய பாலத்தை இடிக்கும் பணிகள் துவங்கப்பட உள்ளன. இதற்கான ஒப்பங்கள் கோரப்பட்டுள்ளதாகவும், 50 மீ நீளமுள்ள பழைய பாலம் இடிக்கப்பட்டு, 150 மீ நீளம் கொண்ட புதிய பாலம் கட்டும் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளதாகவும் இரயில்வே துறையினரால் தெரிவிக்கப்பட்டது.

இரயில்வே துறையினரால் புதிய பாலம் கட்டும் பணி துவங்கப்படும்பொழுது, பெருநகர சென்னை மாநகராட்சியின் மூலம் ரூ.26.45 கோடி மதிப்பீட்டில் பாலத்தின் மேற்கு புறம் 250 மீ மற்றும் கிழக்கு புறம் 180 மீ நீளம் கொண்ட சாய்வுதளம் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும் என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

இந்த ஆய்வின்போது, துணை ஆணையாளர் (பணிகள்) திரு.எம்.கோவிந்த ராவ், இ.ஆ.ப., தலைமைப் பொறியாளர் (பாலங்கள்) திரு.எஸ்.இராஜேந்திரன், மேற்பார்வை பொறியாளர் (பாலங்கள்) திரு.எஸ்.பி.பாலசுப்ரமணியம், இரயில்வே துறையின் உதவி கோட்டப் பொறியாளர் மற்றும் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் உதவி கோட்டப் பொறியாளர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**